## 26.6 மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கு வாகன எரிபொருள் ஒதுக்கீட்டில் மாற்றம்

ஊரக வளர்ச்சி (சி1) துறை

அரசாணை (நிலை) எண் 170 நாள் : 17.08.1999

படிக்க :

அரசு கடித எண் 37361/சி1/97–7 நாள் : 3.6.98.

ஆணை

பார்வையில் குறிப்பிட்டுள்ள கடிதத்தில் மாவட்ட ஊராட்சித் தலைவர்களுக்கு வாகன எரிபொருளாக டீசல் 125 லிட்டர் அல்லது பெட்ரோல் 195 லிட்டர் என வழங்கப்படுகிறது.

2. மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் சில அதிகாரங்கள், பொறுப்புகள் கொடுப்பது குறித்து ஆய்வு செய்வதற்கு உயர்மட்டக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இக்குழு தனது பரிந்துரையில் மாவட்ட ஊராட்சி தலைவர்களுக்கு தற்போது வாகன எரிபொருள் டீசல் 125 லிட்டர் அல்லது பெட்ரோல் 195 லிட்டர் என வழங்கப்படுகிறது. இதில் தொகை வித்தியாசம் காணப்படுகிறது. மேலும் குறைந்த ஊராட்சிகளைக் கொண்ட மாவட்ட ஊராட்சிகளுக்கும், விழுப்புரம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை போன்ற அதிக ஊராட்சிகளைக்கொண்ட மாவட்டங்களுக்கும் ஒரே அளவாக எரிபொருள் வழங்கப்படுகிறது. இதனை ஊராட்சிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு உயர்த்தி வழங்கப்பட வேண்டும் என்று உயர்மட்டக்குழு அரசிற்கு பரிந்துரை செய்துள்ளது.

3. பத்தி 2–ல் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரையை 3.5.99 மற்றும் 4.5.99 ஆகிய நாட்களில் கூடிய அமைச்சரவை கூட்டத்தில் முடிவு செய்து பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தில் வெளியிட்டுள்ள ஆணைக்கு அரசு கீழ்க்கண்டவாறு மாற்றம் செய்து ஆணை வெளியிடுகிறது.

| 10 ஊராட்சி ஒன்றியங்கள் வரை உள்ள மாவட்டங்கள் (6) | டீசல் | பெட்ரோல் |
|---|---|---|
| நீலகிரி, கன்னியாகுமரி, கரூர், தேனி, பெரம்பலூர் மற்றும் திருவாரூர் | 100 லிட்டர் | 150 லிட்டர் |
| 10 முதல் 15 ஊராட்சி ஒன்றியங்கள் வரை உள்ள மாவட்டங்கள் (14) | | |
| திருவள்ளூர், கடலூர், தஞ்சாவூர், நாகப்பட்டிணம், திருச்சிராப்பள்ளி புதுக்கோட்டை, மதுரை, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், தூத்துக்குடி, காஞ்சிபுரம், நாமக்கல் | 125 லிட்டர் | 195 லிட்டர் |
| 15 க்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் வரை உள்ள மாவட்டங்கள் (8) | | |
| வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், தருமபுரி, சேலம், ஈரோடு கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி | 150 லிட்டர் | 240 லிட்டர் |

4. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா. கு. எண் 425/SS(G.V)/99 நாள் 11.8.99 மூலம் ஒப்புதல் பெறப்பட்டு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்